யா/நெடுந்தீவு மகாவித்தியாலயம் - 2019

அரசறிவியல் G.C.E (A/L) **மாதிரிப்பரீட்சை** **02 மணித்தியாலங்கள்**

வினாத்தாள் II

அறிவுறுத்தல்கள் :

*** இவ் வினாப்பத்திரம் மூன்று பகுதிகளைக் கொண்டதாகும்.**

*** பகுதி I இலிருந்து குறைந்தபட்சம் ஒரு வினாவையும் பகுதி II இலிருந்தும் குறைந்தபட்சம் இரண்டு வினாக்களையும் பகுதி III இலிருந்து ஒரு வினாவையும் தெரிவுசெய்து எல்லாமாக ஐந்து (5) வினாக்களுக்கு விடை தருக.**

பகுதி I

01. "அரசியல் என்பது பிரயோக செயன்முறையாகும்" அல்லது "அரசியல் செயன்முறைகள் அரசினை மையப்படுத்தி அமைந்துள்ளது" ஆராய்க. (20 புள்ளிகள்)

02. அரசியல் விஞ்ஞானத்துக்கான பின்வரும் அணுகுமுறைகளில் எவையேனும் இரண்டினை விபரிக்குக.

    (அ) தத்துவார்த்த அணுகுமுறை

    (ஆ) ஒப்பீட்டு அணுகுமுறை

    (இ) நடத்தைவாத அணுகுமுறை (2x10=20புள்ளிகள்)

03. பின்வரும் தலைப்புக்களில் எவையேனும் இரண்டினை ஆராய்க.

    (அ) கபினட் அரசாங்க முறையின் இயல்புகள்

    (ஆ) அரசியல் - அரசறிவியல் வேறுபாடு

    (இ பூகோளமயமாக்கம் அரசுகள் மீது ஏற்படுத்தியுள்ள தாக்கம் (2x10=புள்ளிகள்)

பகுதி II

04. இலங்கையில் காலனித்துவ ஆட்சியில் ஏற்பட்ட அரசியல், சமூக மற்றும் பொருளாதார மாற்றங்கள் பற்றி ஆராய்க. (20 புள்ளிகள்)

05. சோல்பரி அரசியல் யாப்பின் கீழ் பின்வருவனவற்றில் இரண்டை விளக்குக.

    அ) சிறுபாண்மையோர் காப்பீடுகள்

    ஆ) இருசபை பாராளுமன்றம்

    இ) மகாதேசாதிபதியின் நிலை (2x10=புள்ளிகள்)

06. 1972 யாப்பின் கீழ் பின்வருவனவற்றில் இரண்டினை விளக்குக

அ) தேசிய அரசுப் பேரவையின் மீயுயர் தன்மை

ஆ) குடியரசு ஜனாதிபதியின் அதிகாரங்களும் பணிகளும்

இ) அமைச்சரவையின் நிலை

ஈ) பொதுச்சேவையும் நீதிச்சேவையும் (2x10=புள்ளிகள்)

07. 1978 ஆம் ஆண்டு யாப்பின் கீழ் பின்வருவனவற்றைப் பரிசீலிக்குக.

அ. பாராளுமன்றம்

ஆ. 19 ஆம் திருத்தத்தின் முக்கிய அம்சங்களை முன்வைத்து விளக்குக

இ "விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில் உள்ள பலவீனங்கள் (2x10=புள்ளிகள்)

பகுதி III

08. அமெரிக்க சமஸ்டிப் போக்கினை அல்லது சுவிசின் சமஸ்டி போக்கினை ஆராய்க.

(20 புள்ளிகள்)

09. பின்வருவனவற்றுள் எவையேனும் இரு தலைப்புக்களை விளக்குக. (2x10=புள்ளிகள்)

அ) மோதல் வாழ்க்கைச் சக்கரம்

ஆ) மோதல் தீர்வு செயன் முறைகள்

இ) மோதலின் வகைப்பாடுகள்

ஈ) பொதுக்கொள்கை உருவாக்கத்தில் பங்குபற்றும் தரப்பினர்கள்

10. பின்வரும் தலைப்புகளுள் எவையேனும் இரண்டினைப் பற்றி கருத்துரைக்குக.

(அ) இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையின் அண்மைக்காலப் போக்குகள்

(ஆ) இலங்கையின் அரசியற்கட்சிகளின் இயல்பு நிலை

(இ) சர்வதேச அரசியலில் தாக்கம் செலுத்தும் செயற்பாட்டாளர்கள்

(ஈ) ஐக்கிய நாடுகள் சபை அல்லது பொதுநலவாயம் (2x10=புள்ளிகள்)